1990 மார்ச் 21]

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண் உரிமையைப் பாதுகாக்கின்றபோது, பெண்களுடைய கடமையும் வளரும். உரிமை மட்டுமல்ல, கடமையும் இருக்கின்ற காரணத்தினால், இந்தத் தொகையைச் செலுத்தத் தயங்கமாட்டார்கள் என நம்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க வினா எண். 45 மற்றும் வினா எண். 46 தள்ளிவைக்கப்படுகின்றன.

மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகள்.

***3198 திரு. இரா. சாமிநாதன் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மதுரையில் மேயர் முத்து மேம்பாலத்தின் கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து பெற்று மாநகராட்சி ஏலத்தின் மூலம் வாடகை வசூலிக்கும் திட்டம் செயல் படுத்தப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) இத்திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : மதுரை மாநகராட்சி, திருப்பரங்குன்றம் சாலையில் மேயர் முத்து மேம்பாலத்தின் (தற்போது பெரியார் மேம்பாலம்) கீழ் உள்ள கடைகளை நெடுஞ்சாலைத் துறையிடமிருந்து 10–11–1978-ல் பொறுப்பினை எடுத்தது. அதன் பின்னர், முத்து மேம்பாலத்தின் கீழுள்ள இடைவெளி கண்களில் (Spans) கடைகள் அமைக்க 25–1–1980-ம் தேதியில் பொது ஏலம் நடத்தப்பட்டு, கடைகள் அமைக்க அனுமதியும் வழங்கப்பட்டது. ஏலம் விடப்பட்டு பொறுப்பு ஒப்படைத்த நாளிலிருந்து மதுரை மாநகராட்சியால் மாமன்றம் அவ்வப்போது தீர்மானிக்கும் வாடகை உயர்வுகளுடன் லைசென்ஸ்தாரரிடமிருந்து வாடகை வசூல் செய்யப்பட்டு வருகிறது.

திரு. இரா. சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதே போல் அதற்கு அடுத்தாற்போல் இருக்கின்ற பசும்பொன் தேவர் மேம்பலத்திற்குக் கீழே உள்ள கடைகளுக்கும் மாநகராட்சி இதே மாதிரி நடவடிக்கைகள் எடுத்திருக்கின்றதா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி முத்து மேம் பாலத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. அதற்கான தகவல் தற்போது இல்லை. தனிக் கேள்வி போட்டால் தெரிவிக்கப்படும்.

மேல சங்கரன்குழி பேரூராட்சிப் பகுதிகளில் தெரு விளக்குகள்.

*3246 திரு. ஆ. பாலையா :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேல சங்கரன்குழி பேரூராட்சி பகுதிகளில் தெரு விளக்குகள் போடுவதில் ஏற்படும் காலதாமதத்தை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இப்பேரூராட்சியில் புதியதாக 91 விளக்குகள் அமைப்பதில் காலதாமதமாகியுள்ளதென தெரியவருகிறது.

(ஆ) உடனடியாக விளக்குகள் அமைக்குமாறு நாகர்கோவி லில் உள்ள தமிழ்நாடு மின்வாரிய செயற்பொறியாளரை மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

திரு. ஆ. பாலையா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேல சங்கரன்குழி பேரூராட்சியில் தெரு விளக்குகள் போடுவதற்கு மின்சார இலாகாவுக்குப் பணம் கட்டி இரண்டு ஆண்டுகள் முடிந்துவிட்டன. அதிகாரிகள் அந்தத் தெரு விளக்குகளைப் போடுவதற்கு காலதாமதத்தை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலதாமதம் எதனால் ஏற்படுகின்றன. அது தெரு விளக்குகள் அமைப்பதற் கான பொருட்கள் இல்லாத காரணத்தினாலா அல்லது வேறு காரணங்கள் ஏதாவது இருக்கின்றனவா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சியில் மொத் தம் 283 விளக்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை இதுவரை சரிவர இயங்கிக்கொண்டு வருகின்றன. மேலும் 91 விளக்குகள் அமைக்கப்படவேண்டுமென்று பேரூராட்சியில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 11-4-1989-ல்